**தலைப்பு 202 – முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஒக்டோபர் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்டோபர் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கியதாக உள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலவுத் தலைப்புக்கள் 3 இற்கான ரூபா 620,000 ஆன ஒதுக்கங்களில் ரூபா 205,136 ஆன ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது நூற்றுக்கு 18 வீதத்திலிருந்து நூற்றுக்கு 41 வீதம் வரையில் சேமிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் வருடத்தில் திட்டமிடப்பட்டிருந்த சில செயற்திட்டங்கள் நாட்டில் நிலவிய் கொவிட் 19 தொற்றுக் காரணமாக செயற்படுத்தப்படாமையால் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | ஒதுக்கப்பட்ட ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 17,940 ஆன செலுத்தப்பட வேண்டிய மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினச் சம்பளம் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களாக குறிப்பிடப்படாத போதிலும் அப்பொறுப்பு உள்ளடங்கலாக ரூபா 17,432 ஆனது ஒதுக்கங்களை | கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக வெளி மாவட்டங்களில் சேவையாற்றும் ஊழியர்களின் மேலதிக நேர மற்றும் விடுமுறை தின உறுதிச்சீட்டுக்கள் தாமதமாக | செலுத்த வேண்டிய செலவுகள் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| விஞ்சியதாக மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நிதிப் பிரிவிற்கு கிடைத்தமையால் அப்பெறுமதி பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | |

**2.3 முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்தல்.**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இடம் மாற்றம் பெற்றுச் சென்ற இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 70,504, ஓய்வூதியம் பெற்றுச் சென்ற இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 55,448 மற்றும் சேவையிலிருந்து விலகிய ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 31,900 ஆக கடன் தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்டிருந்ததுடன் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு இடம் மாற்றலாகிச் சென்ற 52,800/= ஆன கடன் தொகை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் கணக்குப் பொழிப்புக்கள் மூலம் தீர்க்கப்பட்டிருந்த போதிலும் கணக்கிடப்பட்ட தவறு ஒன்றின் காரணமாக அம் மிகுதி தீர்க்கப்படாது மிகுதியொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. இத் தவறைத் திருத்துவதற்காக நடவடிக்கை எடுககமாறு பொதுத் திறைசேரிக்கு பல தடவைகள் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.<br><br>குறிப்பிட்ட உத்தியோகத்தர் தற்போது ஓய்வூதியம் பெற்றுச் சென்றமையால் 25 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமையான கடன் மிகுதிகளுக்கு உரிய கோவைகளைக் கண்டு பிடிப்பதற்கு முடியாமையால் இது தொடர்பாக கண்டு பிடிப்பதற்கு நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் குழுவின் மூலம் குறிப்பிட்ட கடன் மிகுதி பதிவளிக்கப்படுவதற்குப் பரிந்துரை சமர்பிக்கப்பட்டிருந்ததுடன் அப்பரிந்துரை முன்னாள் செயலாளரின் பரிந்துரையுடன் பதிவளிக்கப்படுவதற்குத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | விரைவில் கடன் மிகுதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இம் மிகுதியைத் தீர்ப்பதற்கு தொடர்ந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | |

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம், திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்ற ஹஜ் நிதியம் தொடர்பான மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | 2019 ஆம் வருடத்தின் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதிலும் கொவிட் 19 நிலைமையினால் ஹஜ் யாத்திரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களுக்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. 2021 ஆம் வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

3.2 **எதிர்பார்க்கப்பட்ட பலன்கள் கிடைக்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முஸ்லிம் கலாச்சார மத்திய நிலையமொன்று நிர்மாணிப்பதற்கு 1995 ஆம் வருடத்தில் வழங்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில், புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான 80 பேர்ச்சஸ் காணியில் திணைக்களத்தினால் 2003 ஆம் வருடத்தில் இரு மாடிக் கட்டிடமொன்றும் 2017 ஆம் வருடத்தில் 10 மாடிக் கட்டிடமொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சரவை அங்கீகாரம் | காணியைக் கையேற்பதற்கான கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இற்றை வரையில் அக் கையேற்பு மேற்கொள்ளப்படவில்லை.<br><br>10 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தில் 4 மாடிகள் மட்டுமே பூரணப்படுத்தப்பட்டிந்ததுடன் பூரணப்படுத்தப்படாத மிகுதி மாடிகள் பயன்படுத்தப்பட | சொத்துக்கள் அதிக பட்சம் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டு 26 வருடங்கள் கடந்திருந்த போதிலும், இற்றை வரையில் சட்டரீதியாகக் காணியைக் கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மேலும், 10 மாடிகளுடன் கூடிய 67,250 சதுர அடியான கட்டிடத்தில் 4 மாடிகள் அதாவது 33,699 சதுர அடி மட்டுமே 2017 ஆம் வருடத்திலிருந்து பயன்படுத்தப்பட்டு வந்ததுடன் மிகுதி 33,547 சதுர அடியளவு கணக்காய்வுத் திகதியியான 2021 யூலை 05 வரையில் பயன்படுத்தப்படாததுடன் கட்டிடத்திற்கான தரச் சான்றிதழ் ஒன்று பெறப்பட்டிருக்கவில்லை. | முடியாதுள்ளது. அத்துடன் மிகுதி மாடிகளைப் பூரணப்படுத்துவதற்கான ஒதுக்கங்கள் கிடைக்கவில்லை. மேலும் கட்டிடத்தைப் பூரணப்படுத்தாது தரச் சான்றிதழ் பெறுவதற்கு முடியாதுள்ளது. | |

## 3.3 முகாமைத்துவப் பலவீனங்கள்

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 6 மாதங்கள் தொடக்கம் 13 வரையான காலப்பகுதிக்கு உரிய ரூபா 457,315 பெறுமதியான 67 காசோலைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் மேலும் செல்லுபடியாக்குவதற்கு அல்லது வருமானத்திற்குச் சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அத் தொகை நிதிக் கூற்றுக்களில் ரூபா 543,816 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இக் காசோலைகள் கொவிட் நிலைமை காரணமாக ஆசிரியர்களுக்கு பாடசாலைகளினால் வழங்கப்படுவதற்கு முயாதிருந்ததுடன் சில காசோலைகளின் செல்லுபடிக் காலம் முடிவடைந்திருந்தது. இக் காசோலைகள் ஒரே தடவையில் அரச வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டால் அப்பணம் மீண்டும் செலுத்தப்படுவதற்கு சட்டரீதியான இயலுமை இல்லாமையால் திணைக்களத்திற்கு சமர்பிப்பதற்கான திகதியை நீடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதற்காக 2021 நவம்பர் 30 வரையான காலம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் 2021 திசெம்பர் கணக்குப் பொழிப்புக்களின் மூலம் அரச வருமானத்திற்குச் செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 1982 இன் 33 ஆம் இலக்க வகுப் சட்டத்தின் 4 ஆம் அத்தியாயத்தின் 43(2) ஆம் பிரிவில் பதிவு செய்யப்பட்ட முஸ்லீம் பள்ளிவாசல், தர்ம நம்பிக்கைப் பொறுப்பு என்பவற்றின் வருடாந்த தேறிய வருமானத்தில் நூற்றுக்கு 6 வீதமானமாகவும் முஸ்லீம் வணக்கஸ்தலத்தின் வருடாந்த தேறிய வருமானத்தில் நூற்றுக்கு 10 வீதமானமாகவும் முஸ்லீம் தர்ம நிதியத்திற்கு வழங்கப்பட வேண்டுமென்பது குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் குறிப்பிட்ட பள்ளி வாசல் மற்றும் வணக்க ஸ்தலங்களிலிருந்து கிடைக்க வேண்டிய பணம் முஸ்லீம் தர்ம நிதியத்திற்கு கிடைத்ததா என பரீட்ச்சிப்பதற்கு பொருத்தமான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பதிவு செய்யப்பட்ட 2497 பள்ளிவாசல்கள் மற்றும் 49 கல்லறைகளின் (Sharyn) வருடாந்த வருமானத்தில் முறையே 6% மற்றும் 10% ஆனது நிதியத்திற்கு செலவு வைப்பதற்கான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றது.<br><br>2020 ஆம் வருடத்தில் பள்ளிவாசல்கள் மற்றும் கல்லறைகள் சிலவற்றுக்கு வருமானம் கிடைத்த போதிலும் கொவிட் தொற்று நிலைமை காரணமாக சில பள்ளிவாசல்களுக்கு போதியளவு வருமானம் கிடைக்காமையால் பங்களிப்புப் பணம் செலுத்தப்படவில்லை. அனைத்து பள்ளிவாசல்களினதும் வருடாந்த நிதி அறிக்கைகள் மற்றும் செலுத்தப்பட்ட பங்களிப்புப் பணம் இணக்கமொன்று மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் அனைத்து பள்ளிவாசல்களும் வருடாந்த நம்பிக்கைப் பொறுப்புச் சபையை நியமிக்கும் போது கணக்கு அறிக்கைகள் வருடாந்தம் சமர்ப்பிக்க | முறையான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டுமென்ற விதிமுறைகள் உள்ளன. மாவட்ட செயலகங்களுக்கு இணைக்கப்பட்ட அபிவிருத்தி அதிகாரிகளுக்கு அப் பிரதேசங்களில் அமைந்துள்ள பள்ளிவாசல்களின் வருமான நிலைமை பரீட்சிக்கப்பட்டு காலாண்டின் அடிப்படையில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கு தேவையான கருவிகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதற்கு மேலதிகமாக இந்த அதிகாரிகளின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கும் பள்ளிவாசல்களின் வருமான நிலைமையை விசாரணைக்குட்படுத்தி நிதியத்தை நிர்வகிப்பதற்கும் உதவிப் பணிப்பாளர் ஒருவருக்கு கையளிக்கபட்டுள்ளது. புதிய கட்டமைப்பின் பிரகாரம் 2021/ 2022 ஆம் வருடங்களில் குறிப்பிடத்தக்க வருமானமொன்று நிதியத்திற்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (இ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்ற | வரைவாக்கப்பட்ட ஹஜ் சட்டமொன்று அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் இற்றை வரையில் அங்கீகரிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஹஜ் நிதியம் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டரீதியாக நிறுவப்படாததுடன் நிதியத்தை மூடுவதற்கோ அல்லது சட்டரீதியான நிலைமையைப் பெற்றுக்கொள்வதற்கோ இற்றைவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன் நிதியத்திற்கான நிதிக்கூற்றுக்கள் இற்றை வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இது சம்பந்தமாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பிட்ட கணக்கு அறிக்கைகள் வெளியார் கணக்காய்விற்கு அனுப்ப வேண்டுமா அல்லது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டுமா என்பது தொடர்பில் கருத்து முரண்பாடுகள் காணப்படுவதுடன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு ஹஜ் குழுவின் உடன்பாட்டுடன் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு குறித்து கொள்ளப்பட்டது. | |

**3.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் செய்யப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்.**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள் முறையாக செயற்படுத்தப்படுவதற்காக பயனுள்ள முறைமையொன்று காணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பின் பிரகாரம் அத் தேவைப்பாடு நிறைவேற்றப்படவில்லை. | அதற்கான உள்ளகக் கணக்காய்வுப் பதவி பல வருடங்களாக வெற்றிடமாகக் காணப்பட்டமையே அதற்குக் காரணமாகும். | திணைக்களத்திற்காக உள்ளகக் கணக்காய்வொண்று செயற்படுத்தப்படல் வேண்டும். |

4. நல்லாளுகை

4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) பந்தியின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குத் தகுந்த கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்கத்திற்காக உள்ளக் கணக்காய்வொன்று நியமிக்கப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பதவியின் வெற்றிடத்தை நிரப்புமாறு பொது நிர்வாக அமைச்சிற்கு கோரிக்கைகள் பல சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைப் பிரகாரம் திணைக்களத்திற்கான மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவள முகாமைத்துவத் திட்டமொன்று இவ் வருடத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |